# "எல்லைக்குள்ளேயே அரபு படைகளை அழிப்போம்"

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தந்தி மேடை எண் : 49 மலர் 9
போன் 389 இதழ் 111

National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 19 ஸபர் 22 வெள்ளிக்கிழமை [2-6-67]

## இஸ்ரேல் முப்படை தளபதி அறிவிப்பு

டெல் அவிவ், ஜூன் 1

அரபு படைகளை அவற்றின் எல்லைகளுக்குள்ளேயே வைத்து அழிக்கும் சக்தி இஸ்ரேலிடம் இருப்பதாக இஸ்ரேல் முப்படை தளபதி ஜெனரல் ராலின் அறிவித்துள்ளார்.

தற்போது மேற்கு ஆசிய நெருக்கடியில் சிறிய தளர்ச்சி தென்பட்ட போதும் இஸ்ரேல் துருப்புகள் எதற்கும் தயாரான 'உஷார்' நிலையில் இருக்க வேண்டுமென ஜெனரல் ராலின் அறிவித்துள்ளார்.

எந்நேரமும் நிலைமையில் சடுதியான திருப்பம் ஏற்படலாமெனவும், இஸ்ரேல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தயாராகவிருக்க வேண்டுமெனவும் முப்படைத் தளபதி எச்சரித்தார்.

### அம்மன் உற்சவம்

புளியங்கூடல், வியா.

ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகி 16ம் திகதி இரதோற்சவத்துடன் முடிவடையும்.

### கள்ளக் குடியேற்றத்தையும் கடத்தலையும் தடுக்க

# விசேஷ பொலிஸ் பிரிவு வடக்கில் நிறுவப்படும்

## ஐ.ஜி.பி. யாழ். விஜயத்தின்பின் செய்துள்ள முடிவு

கொழும்பு, வியாழன்

வட பகுதி கடற்கரையோரங்களில் கண்காணிப்பு வேலைகளிலும், ரோந்து புரியும் நடவடிக்கைகளிலும் இருபத்திநாலு மணிநேரமும் கடமை புரிவதற்கான விசேஷ பொலிஸ் படைப்பிரிவொன்றை நிறுவுவதற்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்தன முடிவு செய்திருக்கிறார்.

வடபகுதி கரையோரங்களுக்கு விசேஷமாக வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்து விட்டுத் திரும்பிய திரு. அலரிக் அபயகுணவர்தன இன்று பத்திரிகை நிருபர்களிடம் மேற்கண்ட தமது முடிவை வெளியிட்டார்.

வடபகுதி துறைமுகங்கள் வழியாக கள்ளக்கடத்தல்கள் நடைபெறுவதைத் தாம் அறிந்து கொண்டதாகவும், அரிசி, பால்மா வகைகள், மற்றும் உணவு வகைகளும் கடத்தப்படுவதாக இன்ஸ்பெக்டர் ஜெனரல் தாம் அறிந்து கொண்டதாகக் கூறினர்.

கள்ளக்கடத்தல் நடைபெறுவது மட்டுமின்றி கள்ளக் குடியேற்றமும் நடைபெறுவதாகக் கூறிய அவர் இவைகளைக் கட்டுப்படுத்தி முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் இந்தப் புதிய பொலிஸ் பிரிவு கடமையாற்றும் என்றார். இப்பகுதியில் கள்ளக் கடத்தலில் முன்னர் எப்போதையும்விட அதிகரித்திருப்பதாகவும் திரு. அலரிக் அபயகுணவர்த்தன கூறினர்.

வல்வெட்டித்துறையில் சமீபத்தில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடத்தையும் இதர கரையோரப் பகுதிகளையும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பார்வையிட்டுவிட்டு கொழும்பு திரும்பியுள்ளார்.

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு சுந்தரலிங்கத்துடனும், கேர்ணல் அப்பவீராவுடனும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வடபகுதி கரையோரப் பகுதி பிரச்னைகள் குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளார்.

## போதனு மொழி பிரச்னையில் இறுதி முடிவு வேண்டும்

### பிரதமர் புறப்படுமுன் தமிழரசார் கேட்பர்

கொழும்பு, வியாழன்

போதனுமொழிப் பிரச்னை சம்பந்தமாகவும் மாவட்ட சபைகள் அமைப்பது பற்றி சிம்மாசனப் பிரசங்கத்தில் சேர்ப்பது பற்றியும் புதிய வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கு நிதி ஒதுக்குவது பற்றியும் பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா இம்மாதம் 13-ந் திகதி கனடாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் ஒரு முடிவு காணும் பொருட்டு தமிழரசுக்கட்சித் தலைவர்கள் இவ்வாரம் பிரதமரைச் சந்தித்துப் பேசவிருப்பதாக அறியப்படுகிறது.

புதிய கல்வி மசோதா இப்பொழுது மந்திரிசபையின் பரிசிலனையில் இருக்கிறது. கல்வி வெள்ளை அறிக்கை பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டபோது அதில் பிள்ளைகளின் போதனு மொழியைத்தெரிவுசெய்யும் உரிமை பெற்றோர்களுக்கு ஒப்படைக்கும் அம்சத்தை தமிழரசுக் கட்சியினரும் இதர தமிழ்ப்பிரதிநிதிகளும் எதிர்த்தனர். எனினும் கல்வி வெள்ளை அறிக்கையை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்டிருக்கும் புதிய கல்வி மசோதாவில் போதனு மொழி சம்பந்தமாக எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லையாம்.

இதனுல்தான் போதனு மொழியில் பெற்ருேருக்கு உரிமை வழங்கும் அச்சத்தை மாற்றி தாய்மொழி மூலமே கல்வி அளிக்கும் உரிமை வழங்கும் அம்சம் சேர்க்கப்படவேண்டுமென பிரதமரைச் சந்தித்து வற்புறுத்த தமிழரசுக்கட்சியினர் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா.

இன்று கொழும்பில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின்144-துவ சுவீப்முடிவுகள் பின்வருமாறு:-

முதலாவது பரிசு

14 Y 0182 ரூ. 99,780

இரண்டாவது பரிசு

33 V 0354 ரூ. 39,912

மூன்ருவது பரிசு

26 E 0920 ரூ. 9,978

தலா 498ரூபாய் 90 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 38 | S | 0547 | 30 | L | 0970 |
| 27 | N | 0174 | 33 | U | 0834 |
| 28 | F | 0384 | 14 | B | 0899 |
| 07 | Z | 0795 | 20 | D | 0908 |
| 08 | X | 0286 | 11 | D | 0970 |
| 07 | X | 0295 | 21 | N | 0688 |
| 11 | X | 0015 | 37 | J | 0919 |
| 02 | B | 0021 | 37 | Z | 0841 |
| 05 | P | 0297 | 27 | C | 0008 |
| 04 | F | 0732 | 39 | B | 0589 |
| 24 | R | 0493 | 17 | T | 0065 |
| 33 | U | 0875 | 22 | Z | 0731 |
| 26 | Z | 0862 | 27 | D | 0328 |
| 03 | N | 0402 | 13 | V | 0414 |
| 23 | M | 0168 | 11 | T | 0428 |
| 24 | C | 0452 | 26 | V | 0983 |
| 16 | C | 0268 | 09 | S | 0485 |
| 34 | S | 0146 | 08 | Y | 0033 |
| 31 | X | 0229 | 22 | S | 0378 |
| 35 | N | 0237 | 13 | T | 0448 |
| 07 | L | 0774 | 32 | U | 0684 |
| 32 | K | 0164 | 22 | N | 0505 |
| 05 | Q | 0291 | 24 | X | 0924 |
| 26 | C | 0495 | 17 | E | 0286 |
| 25 | Z | 0160 | 20 | V | 0840 |
| 01 | E | 0081 | 07 | F | 0113 |
| 30 | M | 0454 | 3[illegible] | D | 0466 |
| 30 | V | 0786 | 07 | G | 0846 |
| 09 | Y | 0134 | 37 | C | 0919 |

[6-ம் பக்கம் பார்க்க]

### வல்வெட்டித்துறை சம்பவம்

## இருவர் மீது வழக்கு தொடர நடவடிக்கை

கொழும்பு, வியா.

வல்வெட்டித்துறை சம்பவத்தில் துப்பாக்கிப்பிரயோகம் செய்தவருக்கும், துப்பாக்கிப் பிரயோகத்துக்கு உத்தரவிட்டவருக்கும் எதிராக குற்றச்சாட்டுக்கள் தயாரித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை அட்டோர்னி ஜெனரல் இலாகா எடுத்துவருவதாக அறியப்படுகிறது.

வல்வெட்டித்துறையில் சென்ற ஏப்ரல் மாதம் 8-ந் திகதி நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்ட இளைஞனின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய பருத்தித்துறை நீதிபதி தமது தீர்ப்பில் அந்த மரணம் 'ஒரு கொலை' என்று கூறியதைத் தொடர்ந்து அட்டோர்னி ஜெனரல் இலாகாஅடுத்தநடவடிக்கை பற்றி ஆராய்ந்து வருகிறது. நீதிபதியின் மரணவிசாரணை அறிக்கையை அட்டோர்னி ஜெனரல் இலாகா பரிசிலனை செய்துவருகிறது. துப்பாக்கிப்பிரயோகத்துக்கு உத்தரவிட்டவர்மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது சம்பந்தமாக பொலிசார் அச்சம்பவம் பற்றி மேலும் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்குத்தொடருவதாக இருந்தால், வல்வெட்டித்துறைச் சம்பவம்பற்றி தனி நபர் விசாரணைக் கமிஷன் ஒன்று இப்பொழுது நியமிக்கப்படுவது சாத்தியமில்லையென்றும் கூறப்படுகிறது.

### மேற்காசிய நெருக்கடி

## நாஸரின் விசேஷத் தூதர் இந்தியா வந்தார்

### வில்சன் அமெரிக்கா செல்கிறார்

லண்டன், ஜூன் 1

அக்காபா வளைகுடாவை கப்பல் போக்குவரத்துக்குத் தடைவிதித்திருப்பதை பலவந்தமாக முறியடிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் ஆதரவு அளிக்காது என்று கருதப்படுகின்றது.

ஐக்கிய அரபுக்குடியரசின் அதிபர் நாஸரின் விசேஷ தூதர் சிலாக் எல்ஹா என்பவர் இன்று இந்தியத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக புதுடில்லி வந்துசேர்ந்தார். அரபுக்குடியரசுக்கு இந்திய அரசாங்கம் அளித்துவரும் ஆதரவுக்கு அவர் நன்றி பாராட்டியுள்ளார்.

இதற்கிடையில் பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் கனடாப் பிரதமருடனும், அமெரிக்க அதிபருடனும் பேசுவதற்காக இன்று அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் இன்று விடுத்த ஒரு செய்தியில் தாம் அரபு நாடுகளுக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்துள்ளார்.

ஜப்பான் மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் நடுநிலைமை வகிப்பதாக அறிவித்துள்ளது.

இன்று அமெரிக்க நாச

[6-ம் பக்கம்பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்

திருவருள் நமக்குச் சுரக்கும்போது அதற்கு நாம் தகுதியற்றவரென்றே உண்மையில் உணர்வோம். நம்மீது தெய்வத்தின் அன்பும்கருணையும் அளவு கடந்ததாகையால், ஆச்சரியகரமாக அவர் நமக்கு உதவுவதாக இருக்கின்றார்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கவருஷ வைகாசி மீ 19உ. (2-6-67)

## பிரதமரின் நம்பிக்கை

'நீண்ட காலமாக இலங்கை இன, மத, துவேஷத்தினால் அல்லற்பட்டது. இதனால் நாம் அனைவருமே பாதிக்கப்பட்டோம். இன்றைய நிலையில் அந்தத் துன்பியல் நாடகம் அகன்று, நாம் அனைவரும் ஒற்றுமைப்பட்டிருக்கிறோம். இதனால் தேசிய அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்தில் அக்கறை கொள்ள முடிகிறது' என்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா திருக்கோணமலை நகரசபை தமக்களித்த பொது வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில் குறிப்பிட்டிருந்தார். தேசியஐக்கியத்தை மீண்டும் நிலைநாட்டுவதிலும் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதிலும் பிரதமருக்குள்ள ஆர்வத்தையும் நம்பிக்கையையும் பாராட்டுகிறோம். அவரது விருப்பம் நிறைவேற வேண்டுமென வாழ்த்துகிறோம்; பிரார்த்திக்கிறோம்.

சென்ற சில வருடங்களாக சீர்குலைந்திருந்த தேசிய ஒற்றுமையைமீண்டும் உருவாக்குவதில் பிரதமரும் தேசிய அரசாங்கமும்பெருமுயற்சிசெய்து வருகிறதென்பதும் இந்த முயற்சியில் அது ஓரளவு வெற்றிபெற்றுள்ளதென்பதும் உண்மையே. இதைக் கொண்டு தேசிய ஐக்கியம் உறுதியான அத்திபாரத்தின்மீது அமைக்கப்பட்டுவிட்டதாகவோ பொருளாதாரமுன்னேற்றப்பாதையில் நாடு அடிஎடுத்துவைத்துவிட்டதாகவோ கருதி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. தேசிய ஐக்கியம் உறுதியான அடிப்படையில் அமைக்கப்பட்டு விட்டால் நாடு விரைவில் பொருளாதார சுதந்திரமடைந்து விடும் என்பது உண்மைதான். ஆனால் இன்றும் வகுப்புவாதக்கூச்சல் சிலஇடங்களில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இது தேசிய ஐக்கியம் நிலைபெறுவதைத் தடைசெய்து கொண்டிருக்கிறது. இதனால் பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர்பிரச்னையிலும் மொழிப்பிரச்னை, மாவட்ட சபைப் பிரச்னைகளிலும்சரி மல்வத்தை மதபீடத் தலைவர் மகாநாயகதேரோ தெரிவிக்கும் கருத்துக்கள் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட உதவுவதாக இல்லை. இதற்காக மல்வத்தை மகா நாயகதேரோமீது குறை கூறுவதற்கும் இடமில்லை. இலங்கையிலுள்ள பெரும்பான்மைமக்களின்மதிப்புமிக்க மதகுரு, மல்வத்தை மகாநாயகதேரோ. மக்கள் மத்தியில் அவரது சொல்லுக்கு மதிப்பும் செல்வாக்கும் அதிகமுண்டு. வகுப்புத் துவேஷிகளும், குறுகியவழியில் அரசியல் 'இலாபம் சம்பாதிக்க எத்தனிக்கும்' அரசியல்வாதிகளும் மகாநாயகதேரோவைச் சந்தித்து தங்கள் கருத்தை அவர் மனதில் பதிய வைத்து விடுகின்றனர்.

அரசாங்க தரப்பினரோ, இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழி மக்களின் தலைவர்களோ, சிறுபான்மை இனத்தவரின் பிரதிநிதிகளோ மகாநாயகதேரோவைச்சந்தித்து உண்மை நிலையை எடுத்துக் கூறுவதாகத் தெரியவில்லை.

உண்மை நிலையை அவருக்கும் பெரும்பான்மை மக்களுக்கும் எ[illegible] விளக்கவேண்டிய[illegible] பேசும் மக்களின் கடமை.

# 'ஆங்கிலத்தைப் புறக்கணிக்காதீர்'

## பாடசாலை பரிசளிப்பு விழாவில் வேர்ணன்

உடுப்பிட்டி, வியாழன்

''இலங்கையை அந்நியர் ஆட்சிபுரிந்த காலத்தில் சகல இனமும் ஒற்றுமையாக வாழ்ந்தன. உலக யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலும் இலங்கையில் வாழ்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் தங்களுக்கிடையில் எவ்வித பேதமுமின்றி ஐக்கியமாக வாழ்ந்து வந்தார்கள். இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே சிங்கள-தமிழ் மக்களிடையே நிலவிவந்த ஐக்கியம் சீர்குலையக்கூடிய ஆபத்து ஏற்பட்டது சிறிது சிறிதாகத் தோன்றிய மொழிப்பிரச்னை இரு இனங்களுக்கிடையிலும் பிரிவை யேற்படுத்துமளவிற்கு வளர்ந்து விட்டது. சர்வதேச மொழியான ஆங்கிலம் உலக மக்களிடையே தொடர்பேற்படுத்தும் பாலமாக விளங்குவதால் நாம் அதனைக் கட்டாயம் பயிலவேண்டும். அதனை நாம் புறக்கணிக்கக் கூடாது.''

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் கூறினார். திரு. அபயசேகரா மேலும் பேசுகையில் கூறியதாவது:

''மாணவர்களிடையே ஆத்மீக உணர்வேற்படவேண்டும். சகல பாடசாலைகளிலும் மாணவர்கள் ஒரே மாதிரியான சீருடை அணியும் வழக்கம் ஏற்பட்டால் மாணவர்கள் தம்மிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை மறந்து சகஜமாகப் பழக முடியும். இம்முறை மூலம் மாணவர்கள் மத்தியில் ஆத்மீக நெறியை ஊட்டலாம். உலகம் அழிய நேரிடினும் நாம் ஆத்மீக நெறியினின்று சிறிதேனும் பிறழாது வாழ முயலவேண்டும். பெற்றோர்களே பாடசாலைகளை வளர்க்கவேண்டும். பாடசாலையின் முன்னேற்றம் ஆசிரியர், பெற்றோர், மாணவர் கையில்தான் தங்கியுள்ளது.''

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி அபயசேகரா பரிசில்கள் வழங்கினார். கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி உட்பட வேறு பலரும் பேசினர். செயலாளர் டாக்டர் எஸ்.மாசிலாமணி நன்றி கூறினர்.

## வருடாந்த உற்சவம்

தொல்புரம், வியா.

தொல்புரம் ஆதிமுத்து மாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் மே 26-ந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது தினமும் பஜனை திரு. சி.வரதராஜா தலைமையில் நடைபெற்றுவருகிறது. இம்மாதம் 3-ந் திகதியுடன் உற்சவம் முடிவடையும்.

## ஆசிரியர்-சங்கம் தீர்மானம்

சுழிபுரம், வியாழன்

அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை ஆசிரிய சங்கச் செயற்குழுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்றபோது சுவீகரிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களை எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு பிரச்னைகள் குறித்து ஆராயப்பட்டது.

சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து கல்வியமைச்சரைப் பேட்டி காணுவதென்றும், சங்கத்தின் வருடாந்தப் பொது மகாநாட்டை இம்மாதப் பிற்பகுதியில் நடாத்துவது என்றும், ஆசிரியர்களின் நிலைபற்றிய கருத்தரங்கொன்றினை விரைவில் நடாத்துவது என்றும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

## 'உலக ஜனநாயகத்துக்கு உழைக்க வேண்டும்'

உடுவில், வியா.

''இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக டாக்டர் ஸாகீர் ஹுசெயின் தெரிவு செய்யப்பட்டது இந்தியாவின் ஜனநாயக நிலையை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. டாக்டர் ஹுசெயின் முன்னைய ஜனாதிபதிகள் காட்டிச்சென்ற வழியைப் பின்பற்றி ஜனநாயகம் நிலைபெறத் தம்கடமையை ஆற்றுவார் என மக்கள் நம்புகின்றனர். அவர் தமது கடமையைச் செவ்வனே செய்ய இறைவனை வேண்டுவதுடன் எமது நல்வாழ்த்துக்களையும் அவருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்'' என கந்தரோடை சனசமூக நிலையம் இந்திய ஜனாதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசெயினுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இளைஞர் கழகம்

''பொறுப்பு வாய்ந்த பதவியைப் பெற்றிருக்கும் டாக்டர் ஸாகீர் ஹுசெயின் இந்தியாவிலும் உலகநாடுகளிலும் ஜனநாயக சக்திகள் மேலோங்கி வளர்ந்து ஸ்திரமடைய உழைப்பதற்கு ஆண்டவன் அருளும், எமது கழகத்தின் நல்வாத்தும் அவருக்கு உதிரித்தாகட்டும்'' என்று உடுவில் இளைஞர் கழகச் செயலாளர் இந்திய ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். உப ஜனாதிபதி திரு. வி. வி. கிரிக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்பப்பட்டது.

ச. ச. நிலையம் வாழ்த்து

யாழ்ப்பாணம், வெள்ளி

அரியாலை மேற்கு காந்தி சனசமூகநிலையம் புதிய இந்திய உபஜனாதிபதி திரு. வி. வி. கிரிக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்துள்ளது. காந்திய தத்துவங்களில் நம்பிக்கை கொண்ட இலங்கையிலுள்ள ஹரிஜனமக்கள் அவரை மனமார வாழ்த்துவதாயும், பாரததேசத்துக்கு மட்டுமல்லாது உலகமக்கள் அனைவரது சுதந்திரத்துக்கும், சுபிட்சத்துக்கும், சமாதானத்துக்கும் அவர் வழிகோல வேண்டுமென்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3கால் நாய்க்குட்டி

யாழ்ப்பாணம், வியா.

அமிர்தம் செல்லர் என்பவருடைய வீட்டில் உள்ள நாய் மூன்று கால் நாய்க்குட்டியொன்றை ஈன்றுள்ளது. பின்னுக்கு இரண்டு கால்களும் முன்னுக்கு ஒரு காலுமே இதற்குண்டு. ஒரு கால் இருக்கவேண்டிய இடத்தில் எதுவித அடையாளமும் இல்[illegible] இந்த[illegible] சயத்தை மாணவர்களும் ம[illegible] பார்த்துவருகின்றனர்.

## கடல்பிரயாணிகள் அவஸ்தை

யாழ்ப்பாணம், வியா.

நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையிலீடுபட்ட புதிய மோட்டார் படகு 'அலையரசி' தற்பொழுது வீசிக்கொண்டிருக்கும் தென்மேல் காற்றினால் பெரிதும் அவஸ்தைக்குள்ளாகியுள்ளது. கடுமையான கடல் கொந்தளிப்புக் காலங்களில் இப்படகு பிரயாணிகளுக்கு பெரும் பீதியை கொடுத்து வருகின்றது.

## நாட்டிலும் நகரிலும்

சென்ற மாதம் 27-ம் திகதி, நேருவின் நினைவு தினத்தன்று, அவர் வசித்து வந்த தீன்மூர்த்தி பவனில் [மும்மூர்த்தி இல்லம்] திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசைக் கச்சேரி நடந்தது. இசைவாணி மேடையில் பக்கவாத்திய சகிதம் பாடிக் கொண்டிருப்பதையும் கீழே இந்தியத் தலைவர்கள் ஆறுதலாக உட்கார்ந்து அந்த இசையில் மெய்மறந்து லயித்திருப்பதையும் காட்டும் புகைப்படம் ஒன்று 'தினமணி' பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

அந்தப் படத்தைப் பார்த்தபோது இசையின் மகத்துவம்தான் என்னே! என்று வியந்தேன். ராஷ்டிரபதி ஸாகீர் ஹுஸேன் கால்களை மடக்கி சப்பாணி கட்டிக்கொண்டு முனிபுங்கவர் போல் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார். அவருக்கு சற்று தூரத்தில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி தூய வெள்ளுடையில் அடக்கமே உருவாகக் காணப்பட்டார். வேறொரு பக்கத்தில் உபராஷ்டிரபதி திரு வி. வி. கிரி ஷெர்வாணி தரித்து வீற்றிருந்தார்.

இத்தனை பெரிய சதஸில் பாடுவதற்கு திருமதி எம். எஸ். என்ன பாக்கியம் செய்தாரோ? பாரத நாட்டின் முன்னணித் தலைவர்கள்-அக்பர், ஷாஜஹான், அதிகமான், ராஜராஜன் முதலிய பேரரசர் வரிசையில் இருக்கக்கூடிய கலாபோஷகர்களின் முன்னிலையில் தென்னகத்துக் கோகிலகான இசைவாணி கானமாரி பொழிவதைப் படத்தில் பார்த்தபோது எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும் இசைக்கு முன்னே கட்டுண்ட நாகம் போலாகிவிடுவார்கள் என்ற உண்மையும், இசைக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கும் வள்ளல்கள் இன்னும் இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சி தரும் உண்மையும் பிரத்தியட்சமாகின.

எம். எஸ். அவர்கள் அந்தக் கச்சேரியில் தமிழ்ப் பாடல்களையும் பாடி தீன்மூர்த்திபவனில் தேமதுரத் தமிழோசையை பரப்பியிருப்பார்கள் என்பது நிச்சயம். ஆயினும் வடநாட்டு ரசிகர்களை ஆட்கொள்வது அவருடைய பேர்போன ஹிந்தி பஜன்களே. அவரது ஹிந்தி 'மீரா' வடநாடெங்கும் வெற்றிவாகை சூடியது, அதிலுள்ள அற்புதமான பஜன்களாலேயே.

இசைவாணர்களாகிய பாணர்களையும்பாணினிகளையும் சங்ககாலத்து வள்ளல்களும் மன்னர்களும் சிற்றரசர்களும் போற்றிப் புகழ்ந்து பேணி வந்திருக்கிறார்கள். பிற்பாடு முடியுடை மூவேந்தரும், முகம்மதிய சக்ரவர்த்திகளும், விஜய நகர மன்னர்களும், நாயக்கர்களும் இப்பணியைச் செய்து வந்தனர். இந்தப் பரம்பரையில் வந்த இன்றைய தலைவர்களும் இசைக்குத் தக்கமதிப்பும்கௌரவமும் அளித்து வருவது சாலப் பொருத்தமே.

ஃ ஃ ஃ

மனிததெய்வங்களின் ஆதரவை நாடாது, அவர்களுடைய பொற்கிழியையும், பொன்னுடையையும் துச்சமாக மதித்து, தெய்வத்துட் தெய்வமாம் பரம்பொருளிடத்தில் தங்கள் இசைஞானத்தை அர்ப்பணித்து, அவன் மீது தங்கள் கானாமிர்தபானத்தை வர்ஷித்த மகான்களும் இருந்தார்கள். ஸ்ரீராமனைவிட வேறெவர் மீதும் பாடவிரும்பாத நமது தியாகராஜ ஸ்வாமிகளே

[4-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

இவர்களுக்குள் முதல்வராக விளங்குகிறார். தஞ்சாவூர் சரபோஜி மஹாராஜா தமது தர்பாருக்கு வந்து பாடும்படி தியாகராஜரிடம் தூதர்களை அனுப்பியபோது, அவர் 'நிதிச்சால சுகமா, ஸ்ரீராமுநி சன்னிதி சேவ சுகமா?' என்று பாடிவிட்டு வந்து தூதர்களை திருப்பியனுப்பி விட்டார். பொன்னையும் நிதியையும்விட ஸ்ரீராமன் சன்னிதியில் சேவை செய்வதே மேலான சுகம் என்று கருதினார்.

அக்பர் சக்கரவர்த்தியின் அரண்மனை வித்வான் தான்ஸேன் அற்புதமான பாடகன், அவனுடைய குருவாகிய ஹரிதாஸ ஸ்வாமிகளை அக்பர் எவ்வளவோ வருந்தியழைத்தும் அவர் அரசன் முன்பாட மறுத்துவிட்டார். ஹரிதாஸரின் பாட்டை எப்படியாவது கேட்கவிரும்பிய அக்பர், ஒரு தந்திரம் செய்து, தானே மாறுவேடம் பூண்டு தான்ஸேனுடன் ஹரிதாஸ் ஆச்சிரமத்துக்குப் போய் மறைந்திருந்தான். அங்கு குருநாதரின் முன்னிலையில் தான்ஸேன் வேண்டுமென்றே அவர் சொல்லிக்கொடுத்த ஒரு பாட்டை பிழையாக பாடினான். ஹரிதாஸ் உடனே அவனைத் திருத்தி தாமே அதைப் பாடிக் காட்டினார். அக்பர் மறைவிலிருந்து கேட்டு மகிழ்ந்தார்.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'ஐ. அ. குடியரசு - இஸ்ரேல் கலப்பு போர் ஓய்வு கமிஷனை மீண்டும் அமைக்கவும்'

## பந்தோபஸ்துசபையில் தீர்மானம்

### ஐ. அ. கு. சார்பில் பாரதம் பிரேரித்தது

### பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் கவலை

நியுயோர்க் ஜூன் 1

நேற்றிரவு இங்கு கூடிய ஐ.நா.பந்தோபஸ்துசபை, ஐ அ. குடியரசினதும் அமெரிக்காவினதும் இரு தீர்மானங்களையும் ஆலோசிப்பதற்கென நாளை வரை ஒத்திவைக்கப்பட்டது:

மேற்கு ஆசியாவில் நிலைமையை மோசமாக்கியதற்கு இஸ்ரேலே காரணமென்றும், ஐ. அ குடியரசு--இஸ்ரேல் கலப்புப்போர் ஓய்வுக்கமிஷனை மீண்டும் அமைக்கும்படியும் ஐ அ குடியரசு தீர்மானம் கோரியது.

மேற்கு ஆசியா விவகாரத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளைப் பகைமை தவிர்த்து, கட்டுப்பாட்டுடன் நடந்து, அங்கு நிலவும் நெருக்கடியைத் தளர்த்துமாறு அமெரிக்க தீர்மானம் கேட்டது.

ஐ. அ. குடியரசு, பந்தோபஸ்து சபையில் அங்கத்துவம் வகிக்காததால், அதன் தீர்மானத்தை இந்தியா, சபையில் பிரேரித்தது.

ஐ. அ. குடியரசு--இஸ்ரேல் கலப்புப் போர்க்கமிஷன், பாலஸ்தீன் போர்முடிவில், 1949-ல் அமைக்கப்பட்டது. சூயஸ் கால்வாய் நெருக்கடியின் பின், 1956-ல் இஸ்ரேல் அந்தக் கமிஷனில் கலந்துகொள்ளவில்லை. இஸ்ரேலை அதில் மீண்டும்சேரும்படி வற்புறுத்துமாறு ஐ. அ. குடியரசுத் தீர்மானம் ஐ. நா. பந்தோபஸ்துசபையை வேண்டிக்கொண்டது.

### இந்தியாவின் ஆதரவு

ஐ. அ. குடியரசு தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசிய இந்தியப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி, அத்தீர்மானம் மேற்கு ஆசியாவில் அமைதியை ஏற்படுத வழிவகுப்பதாகக் கூறினார். மேற்கு ஆசியாவில் கட்டுப்பாடான முறையில் நடந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட நாடுகளைக் கேட்டுக் கொள்ளும் அமெரிக்க தீர்மானத்துக்கும் திரு.பார்த்தசாரதி தமது நாட்டின் ஆதரவைத் தெரிவித்தார்.

ஐ. அ. குடியரசு-இஸ்ரேல் கலப்புப்போர்க் கமிஷனை இரண்டுவாரத்திற்குள் மீண்டும் அமைக்கும்படி ஐ. அ. குடியரசுத்தீர்மானம், பந்தோபஸ்து சபையைக் கேட்டுள்ளது.

### அமெரிக்க தீர்மானம்

அமெரிக்கத் தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுகையில், மேற்கு ஆசியாவில் நெருக்கடியை உண்டாக்கும் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபட வேண்டாமென்று சம்பந்தப்பட்ட நாடுகளை, அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பர்க் கேட்டுக் கொண்டார். தூதரக நடவடிக்கைகள் மூலமாகப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள முயற்சி எடுக்கப்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

### ஈராக்

அக்காபா வளைகுடாவில் ஐ அ. குடியரசின் ஆதிபத்திய உரிமையைத்தான் ஆதரிப்பதாக ஈராக் பிரதிநிதி கூறினார். போரில் இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளுக்கு ஈராக் எண்ணை விற்காதுஎனவும் அவர்தெரிவித்தார்.

### ஜோர்தான்

மீண்டும் மீண்டும் ஆக்கிரமிப்பான நடவடிக்கைகளில இஸ்ரேல் ஈடுபடுவதாக ஜோர்தான் பிரதிநிதி குற்றஞ் சாட்டினார். இஸ்ரேலை, போர் விலக்குப் பிராந்தியத்திலிருந்து விலகியிருக்குமாறு ஜோர்தான் பிரதிநிதி எச்சரித்தார்.

### மறுப்பு

அக்காபா வளைகுடாவில் ஐ.அ.குடியரசு பந்தனத்தைப் பரிசோதிப்பதற்காக அமெரிக்கா தனது கப்பலொன்றை அங்கு அனுப்ப விருப்பதாகக் கூறப்படும் செய்தியைஅமெரிக்க ராஜாங்க இலாகா மறுத்துள்ளது.

### தடை உத்தரவு

லைபீரியா கொடிபறக்கும் லைபீரியக் கப்பல்கள் எதுவும் அக்காபா வளைகுடாவுக்குச் செல்லக்கூடாதென லைபீரிய ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். லைபீரியவர்த்தகக் கப்பல்கள் உலகிலேயே பெரிய கப்பல்களிற் சிலவாகுமெனக் கருதப்படுகிறது.

### ரஷ்ய கப்பல்கள்

மத்தியதரைக் கடலுக்கு வந்துகொண்டிருக்கும் 10 ரஷ்ய கப்பல்களில், முதலாவது கப்பல், பொஸ்பெரஸ் கடலிலிருந்து இப்போது கருங்கடலுக்குச் சென்றுள்ளது. இப்பத்துக் கப்பல்களில் நான்கு நாசகாரிக் கப்பல்களாகும்.

### பிரதமர் வில்ஸன் கருத்து

மேற்கு ஆசிய நிலைமை பற்றிப் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பேசிய பிரிட்டிஷ் பிரதமர் திரு.வில்சன், இஸ்ரேல்வாழ்வதற்கான உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றார். அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதில் இது ஒரு முக்கிய அம்சமாகுமென்றார் அவர். இஸ்ரேலின் வாழும் உரிமைக்கே அரபு நாடுகள் சவால்விடுவதன் மூலம், அது இதுவரை காலமும் வாழ்ந்து வந்துள்ளதை மறுக்க முற்படுகிறார்களென திரு.வில்சன் குறிப்பிட்டார்.

மேற்கு ஆசியாவில் சமாதானத்தை நிலைநாட்டப்பல நாடுகள் முயற்சி எடுப்பதாகவும், சோவியத் ரஷ்யாவுக்கு அங்கு சமாதானம் ஏற்படுத்தவுள்ள ஆவலை விசுவாசமானதெனத்தாம்கருதுவதாகவும் திரு. வில்சன் மேலும் தெரிவித்தார். மேற்கு ஆசிய நெருக்கடியில் இப்போது சற்று 'மூச்சு விடும்' அவகாசம் கிடைத்துள்ளதாகவும், ஆனால், காலம் சமாதானத்தின் பக்கம் சார்ந்துள்ளதாகத் தெரியவில்லையெனவும் பிரதமர் வில்சன் மேலும் கூறினார்.

---

காலஞ்சென்ற

## கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவா மகள் திருமணம்

### ஈ. வெ. ரா. நடத்துகிறார்

திருச்சி, ஜூன் 1

காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. ஜீவானந்தத்தின் மகள் திருமணம் திருச்சியில் ஈ.வெ.ரா பெரியார் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

ஜீவானந்தத்தின் மூத்த மகள் உஷா தேவிக்கும் திருச்சி குடும்பக்கட்டுப்பாடு இலாகாவில் வேலை பார்க்கும் அதிகாரி அருணாசலத்துக்கும் ஜூன் மாதம் 7-ம் திகதி திருமணம் நடக்கிறது.

இத் திருமணம் திருச்சியில் உள்ள பெரியார் மாளிகையில் நடக்கிறது. திராவிட கழகத் தலைவர் ஈ. வெ. ரா. தலைமைதாங்குகிறார்.

இந்த திருமணத்தில், தமிழ்நாடு முதல்மந்திரி திரு. அண்ணாதுரை, அகில இந்திய காங்கிரஸ்கட்சித் தலைவர் திரு. காமராஜர், இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ராமமூர்த்தி, திரு. ம. பொ. சிவஞானம், குன்றக்குடி மடாதிபதி ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

இந்தத் திருமணம் ஒரு கலப்புத் திருமணம் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமணத்தை பெரியார், வலதுசாரி கம்யூனிஸ்ட் சட்சித் தலைவர் திரு. மணலி கந்தசாமி ஆகியோர் முன்னின்று நடத்தி வைக்கிறார்கள்.

---

## வட காஷ்மீரில் தேர்தல்

ஸ்ரீநகர், ஜூன் 1

வடக்கு காஷ்மீரிலுள்ள லடாக் பகுதியில் காஷ்மீர் அசெம்பிளிக்கு இரண்டு பிரதிநிகளைத் தேர்ந்தெடுக்க இன்று அங்கு தேர்தல் நடைபெறுகிறது.

இரண்டு தொகுதிகளில் நடைபெறும் இத்தேர்தலில் ஏறத்தாழ 50,000 பேர் வாக்களிப்பார். மொத்தம் 130 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப் பதிவு செய்யப்படும்.

இரு தொகுதிகளிலும் காங்கிரசுக்கும், சுயேச்சைகளுக்கும் நேரடிப் போட்டி நடைபெறுகிறது.

---

## அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம்

### இந்தியாவின்நலன் பாதுகாக்கப்படும்

— சாக்ளா

புதுடில்லி, ஜூன் 1

இந்தியாவின் நலன் பந்தோபஸ்து ஆகியவற்றைப் பாதுகாக்கும் முறையில் அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தம் திருத்தப்படும் என இந்திய வெளிவிவகார மந்திரி திரு சாக்ளா, நேற்று லோக சபையில் கேள்வி நேரத்தில் பேசுகையில் கூறினார்.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் தற்போதைய உருவில், இந்தியா அதில் கையெழுத்திட முடியாதென அவர் மேலும் கூறினார். இந்தியாவுக்குச் சீனாவின் அபாயம் எப்போதும் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்குத் தற்போது அணுகுண்டு உற்பத்தி செய்யும் நோக்கம் கிடையாதெனக் கூறிய திரு. சாக்ளா, எதிர்கால சந்ததியினரின் வாழ்வை எந்த அரசாங்கமும் நிர்ணயிக்க உரிமை கிடையாதெனவும் குறிப்பிட்டார்.

---

## தமிழின் இனிமையை ஜெர்மனிக்கு உணர்த்துவேன்'

— உடுப்பிட்டி எம்.பி.

உடுப்பிட்டி, வியாழன்

''தமிழினம் தங்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் போராடினாலே எமது உரிமைகளைத்தயக்கமின்றிப் பெறமுடியும். செல்லுமிடமெல்லாம் தமிழ் மணம் பரப்புவதே தமிழன் கடமை. எனது மேற்கு ஜெர்மனி விஜயத்தின் போது அங்குள்ள மக்களுக்குத் தமிழ் மொழியின் இனிமையை உணர்த்துவேன்'' என்று உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கூறினார். உடுப்பிட்டி எம். பி. மேற்கு ஜெர்மனி செல்வதை முன்னிட்டுப் பாராட்டு தெரிவித்து உடுப்பிட்டி வாலிப முன்னணியினரால் நெல்லியடியில் அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே திரு. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு சொன்னார்.

பருத்தித்துறை நகர சபைத் தலைவர் திரு. என். நடராசா, சமாதான நீதிபதி திரு. ந. தேவசகாயம், நெல்லியடி வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. க ஞானசுப்பிரமணியம், அகிலஇலங்கை அரசினர் தமிழாசிரியர் சங்க முன்னாள் தலைவர் திரு. க. கந்தப்பு ஆகியோருட்பட வழக்கறிஞர்கள், நியாயவாதிகள், கிராம சேவையாளர்கள், ஆசிரியர்கள் முதலியோரும் இப் பாராட்டு விழாவிலும், விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டனர்.

---

## நைஜீரியா பிரச்னை

### ஐ. நா.வுக்கு செய்தி

லாவோஸ், ஜூன் 1

நைஜீரியாவிலிருந்து தன்னைக் குடியரசாகப் பிரகடனப்படுத்திக்கொண்ட கிழக்கு நைஜீரியாவுடனான தபாற், தந்தி மற்றும் தொடர்புகள் யாவற்றையும் நைஜீரிய மத்திய சமஷ்டி அரசாங்கம் துண்டித்துள்ளது.

ஐ. நா. சபைக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் புதிய குடியரசை அங்கத்துவ நாடுகள் அங்கீகரிக்கக்கூடாதென நைஜீரிய தலைவர் கேர்ணல் கோவான் கேட்டுள்ளார்.

கிழக்கு நைஜீரியக் குடியரசை அங்கீகரித்ததாகச் செல்லப்படும் நாடுகளில் இஸ்ரேல், கானா, எதியோப்பியா ஆகியன அப்படி அங்கீகாரம் தெரிவிக்கவில்லை என கேர்ணல் கோவான் அறிவித்துள்ளார்.

---

## ஹைபோங் மீது மீண்டும் தாக்குதல்

சைகோன், ஜூன் 1

வடவியட்னமில் ஹைபோங் பகுதியில் அமெரிக்க விமானங்கள் நேற்று மீண்டும் தாக்குதலில் ஈடுபட்டன. அங்குள்ள எண்ணை நிலையங்களை அவை தாக்கிக் குண்டு வீசின.

ஹனோய், ஹைபோங் மீதான அமெரிக்க விமானத் தாகுதலுக்கு ஜனாதிபதி ஜோன்சன் தடை விதித்துள்ளாகக் கூறப்பட்ட போதும், நேற்று இவ் விமானத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

மூன்று அமெரிக்க விமானங்களை நேற்றுச் சுட்டு வீழ்த்தியதாக வடவியட்னும் அறிவித்துள்ளது.

---

## மலாய் மொழி

கோலாலம்பூர், மே 31

மலேஷியாவில் செப்டம்பர் ஆரம்பத்திலிருந்து மலாய் மொழி தேசிய மொழியாக பிரகடனப்படுத்தப்படும். ஆங்கிலம் இப்பொழுது வகித்து வரும் இடத்துக்கு மலாய் மொழி அந்தஸ்து உயர்த்தப்படும்.

---

## கிரீசில் 29 எம். பி.க்கள் கைது

அதென்ஸ், ஜூன் 1

கிரீசில் 29 பார்லிமெண்ட் எம். பி.க்கள் கைது செய்யப்பட்டனர். தேசத்தின் பாதுகாப்பை முன்னிட்டு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளாகவும், தேச நலனுக்குப் பங்கம் விளைவிக்க மாட்டோமென அவர்கள் வாக்குறுதி அளிக்கும் பட்சத்தில் விடுதலை செய்யப்படுவரெனவும் இங்கு அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.




அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர்
உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு
1967 ஜூன் 8ந் திகதி 145-வது சீட்டிழுப்பு கம்பஹாவில் நடைபெறும்.

**1-வது பரிசு ரூ 100,000** அல்லது புத்தம்புதிய ஹோல்டன் ஸ்டேசன் வாகனும் ரூ. 80,900/- ரொக்கமும் X



**2-வது பரிசு ரூ. 40,000** அல்லது புத்தம்புதிய ஹோல்டன் ஸ்பெஷல் சீடன்காரும், ரூ. 22,650/- ரொக்கமும் X



**3-வது பரிசு ரூ. 10,000** அல்லது புத்தம்புதிய போர்ட் ட்ராக்டர்[கம்பெனி பட்டியலில் கண்டுள்ள விலை ரூ. 14,000/-மாக குறிப்பிடப் பட்டிருக்கும் இந்த ட்ராக்டரை மெஸர்ஸ் சத்தியாவதி ஸ்டோர்ஸ் & மோட்டார் ட்ரான்ஸ்போட் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் உபசரணையுடன் விசேஷமாகக் குறைக்கப்பட்ட விலைரூ.10,000/-க்குவழங்குகிறுர்கள்]



X இவைகள் தீர்வை உட்பட வழமையான கம்பெனி பட்டியல் விலைக்குக் குறைந்ததாகும்.

**100 ஆறுதல் பரிசுகள்:**

கடந்த இரண்டு கார் சீட்டிழுப்புகளில் 100 அதிர்ஷ்டப் பரிசு பெற்றவர்கள் தலா ரூ 1256-00 பரிசு பெற்றுர்கள்.

இந்தக் கார்களையும் ட்ராக்டர்களையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாள்களுக்கு மட்டுமே வழங்கப்படும்

**ஞாபகத்திலிருக்கட்டும்:-**

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


—சினிமா—

# தாய்க்கு தலை மகன்

—விமர்சனம்—

கதையில்லாமல் படமெடுத்து அதை தமிழ்பட ரசிகர்கள் மத்தியில் ஓடவைப்பதில் இந்தத் தேவருக்குநிகர் தேவர் தான்! தலைமகனைப் பெற்ற தாயின் பாசஉணர்ச்சையைச் சுற்றிச் சுற்றி எடுக்கப் பட்ட படம் தான் தாய்க்குத் தலைமகன்.

ஒரு பெண்ணுக்கு தலைமகனைப் பெற்றுவிட்டால், அது அவளுக்கு மறுபிறவி. அந்த மகன் கெட்டவனே, நல்லவனே-அவன் மீது தான் ஒவ்வொரு தாய்க்கும் பாசம் அன்பு.....-இது தான்கதை.

இருவருக்கிடையில் காதலை எப்படியோ ஏற்படுத்தி, வழக்கமாகத் தமிழ்ப் படங்களில் உள்ளதுபோல-மன்னிக்கவும்,எம். ஜி. ஆர். படங்களிலுள்ளது போல காதலர்களை 'பார்க்கி' லும், 'ஸ்ரேட்' டிலும், 'பீச்'சிலும் விழுந்து புரண்டு ஆடிப்பாட வைக்கும் காட்சிகள்' தாய்க்குத் தலைமக'னிலும் பஞ்சமில்லை!

எம். ஜி. ஆர். ஓட்டிக் கொண்டுபோன கார் திடீரென்று'பிரேக்' போட்டுவிட, பின் சீட்டிலிருந்த ஜெயலலிதா திடீர் அதிர்ச்சியில் அப்படியே எம். ஜி. ஆ.ரைப் பிடித்துக் கொள்ள, இவர்களுக்கிடையில் காதல் தோன்றி....அப்பாடா,பின் சொல்ல வேண்டுமா ஒரே கும்மாளம்,கும்மாளம், கும்மாளம்.....

தலைமகனின் தம்பியாக வரும் எம்.ஜி.ஆ.ருக்கு இடியும் குத்தும் போட நிறைய சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறுர்கள். அவர்' ஸ்ரண்ட்'டைப் பற்றி சொல்ல வேண்டுமா? ஜெயலலிதா அரைகுறை ஆடை அணிந்து கவர்ச்சி உடைபோட்டு வளைந்து குலுங்கி ஆடி அப்படியே மயக்க வைத்து விடுகிறுர்!

அசோகன் தான் தாய்க்குத் தலைமகன், நல்லவனுக இருக்கும் போது நடித்தநடிப்பை விட கெட்டவனுக நடிக்கும் போது ஏமாய்த்து விடுகிறுர்.

அப்பாவாக வரும் ரங்காராவும், அசோகன் மனைவியாக வரும் சௌகார் ஜானகியும் தமக்கே உரிய பாணியில் நடித்திருக்கின்றனர். நாகேஷ்-மனேரமா ஜோடிகளின் நகைச் சுவை எடுபடவில்லையே!

பாட்டுக்கள்பற்றிசொல்ல என்ன இருக்கிறது?

ஆரூர்தாஸின் வசனமும், திருமுகத்தின் டைரக்ஷனும் தேவரின்'முருக பக்தி' யும் தான் படத்தை ஓடவைக்கிறது என்றே சொல்லலாம்.

யாழ்ப்பாணம் ராணித் தியேட்டரில் இப்படம்ஓடிக் கொண்டிருக்கிறது.

—பாமா

## 25 ஏக்கர் நிலத்தை மாணவர் திருத்துவர்

புன்னலைக்கட்டுவன்,வியா.

அக்கராயன்குளத்தில்காந்தீய சேவா சங்கம் நடாத்தும் அனதை மடத்துக்கென அரசாங்கம் ஒதுக்கியுள்ள 25 ஏக்கர் நிலத்தைத் திருத்துவதற்காக சுமார் 300 மாணவர் அழைக்கப்பட்டுள்ளனர். யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா. இவ்வேலையனுபவ இயக்கத்தை ஜூன் மாதம் 12-ம் திகதி ஆரம்பித்து வைப்பார்.

இத்திட்டத்தின் மூலம் தேசிய இன ஒற்றுமையை ஊட்டுவதுடன் உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமையைச் சமாளிக்கவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் கஷ்டம

நெடுந்தீவு, வியாழல

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் மாணவர் தொகை அதிகரித்துவருவதால்போதியளவு கதிரைகள் இன்றிஒரு கதிரையில் இரண்டுமாணவர் உட்காரவேண்டிய நிலை பெருமளவில் காணப்படுகிறது. இதற்கிடையில் இம்முறை ஜி. ஸி. ஈ. சா தாரணதரம் விஞ்ஞானப் பிரிவில் விசேட சித்திகளை பெற்றிருப்பதாலும் விசேட வசதிகளுடன் விஞ்ஞான ஆய்வுகூடம் இங்கு உருவாக்கவிருப்பதாலும் தொடர்ந்து இம்மாணவர்சள் இங்கேயே கல்விகற்க வேண்டியவர்களாய் இருக்கிறுர்கள். இதனுல் மேலும் தளபாடத் தட்டுப்பாடுஅதிகரிக்குமென நம்பப்பப்படுகிறது,


தமிழ் நாடகக் குழு
இலங்கைக் கலைக்கழகம்


**நாடக எழுத்துப் போட்டி, 1967**

(ஓரங்க நாடகங்களும் பொது நாடகங்களும்)

**இறுதித் திகதி 31-8-1967**

விபரங்களுக்கு

செயலாளர், இலங்கைக் கலைக்கழகம், 135, தர்மபால மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரிக்கு எழுதவும். 1784


### அல்லைப்பிட்டிக் கிராமசபை மணல் ஏற்றி வெளிச் செல்லும் வாகனங்களுக்கு வரி அறவிடுவதற்காகிய

## கேள்வி விளம்பரம்

1967-ம் ஆண்டு ஆடி மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1967-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ம் திகதி வரையும் அல்லைப்பிட்டி மண்கும்பான் ஆகிய இடங்களிலிருந்து மணல் ஏற்றி வெளிச்செல்லும் வாகனங்களுக்கு வரி அறவிடுவதற்கு 17-6-67 சனிக்கிழமை காலை 10-30 மணி வரை அல்லைப்பிட்டிக் கிராமசபைக் கந்தோரில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களுக்கு தனித்தனி ரூபா 250/- பிணையாகவும், ரூபா 10/- கேள்விப் பத்திரக் கிரயமாகவும் கொடுத்து அல்லைப்பிட்டிக் கிராமசபைக் கந்தோரில் முறையான கேள்விப்பத்திரம்பெற்று அப் பத்திரத்திலேயே கேள்விகள் சமர்ப்பித்தல்வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 16-6-67 மாலை மூன்று மணிவரை வழங்கப்படும். இதற்குரிய பிரமாணங்களையும், நிபந்தனைகளையும் அல்லைப்பிட்டிக் கிராமசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. கதிரவேலு
அக்கிராசனர்,
அல்லைப்பிட்டிக் கிராமசபை.
2318

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 துதிப்பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 தொழிலாளர்வேளை.

இரவு 6-15 பஜனை, 6-45 முத்திநெறி — சைவசஞ்சிகை, 7-15 திருமுறைப் பயிற்சி — பி. ஆர். இராசசேகரன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கதாப்பிரசங்கம் — வி. எஸ். கணேசசுந்தரம், 10-15 தேர்ந்த இசை.


## வரி விளம்பரம்

### தேவை

''சேல்ஸ் கேள்''

எமது தேயிலையை வானில் சென்று விற்பனை செய்வதற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. முன் அனுபவமுள்ளோர் விரும்பத்தக்கது. சம்பளம்: நாள் ஒன்றுக்கு ரூபா 5/-ம் கமிஷனும் உண்டு. விரும்புவோர் நற்சாட்சிப்பத்திரங்களுடன் 4, 5-6-67 திகதிகளில் காலை 10 மணிக்கு நேரில் வரவும். டாட்டா தேயிலைக்கம்பனி, சுன்னுகம். 1880

### விற்பனைக்கு

காணி

பண்ணை — காரைநகர் ரேட்டில் [வில்லூன்றி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்] 75 பரப்பு காணி விற்பனைக்குண்டு. திருமதி V. சுப்பிரமணியம், 42, கொட்டடி, ''செல்வஸ் தான்'' ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1879

### குத்தகைக்கு

அரிசிஆலை

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் பிரபல்யமான இடத்தில் அரிசி, மிளகாய் அரைக்கும் ஆலை, நெல் அவித்துக் காயப்போடக் கூடிய சகல வசதிகளும் அடங்கியது. குத்தகைக்குக் கொடுக்கப்படும். விபரங்கட்கு 550/6, காங்கேசன்துறை வீதியில் அறிந்து கொள்ளலாம். 1882

### காணவில்லை

சாரதி லைசென்ஸ்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் 31-5-67 இரவு 9 மணியளவில் 158879 இலக்கமுடைய பஸ் லைசென்ஸ் தவறிவிட்டது. கண்டெடுப்போர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1881

### கல்வி

வகுப்புகள்:

சிறந்த ஆசிரிய அனுபவமுள்ளவர்களால் விஞ்ஞானம், கலை, ஆங்கிலம், சிங்களம், வர்த்தக பாடங்கள் போதிக்கப்படுகின்றன. மற்றும் அரசாங்க பரீட்சைகளுக்காகிய விசேட வகுப்புகளும் உண்டு. உடனே சேருங்கள். வர்த்தகக் கல்லூரி, சந்தை வீதி, உடுப்பிட்டி. 1877

ராதா மணி மார்க்

# சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச்செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபால இடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச் சரக்கு, வாசனுதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரேட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "அம்மா எதிரியின் மண்டையில் போத்தலினுல் அடித்தார்"

## மல்லாகம கொலைவழக்கில் 10 வயது சிறுவன் சாட்சியம

யாழ்ப்பாணம், வியா.

"எதிரி என் பேத்தி பொன்னுப்பிள்ளையின் கையில் கத்தியால் வெட்டியதும் பேரன் கத்தியைப் பறித்து எடுத்தார். அம்மா அருகில் இருந்த போத்தலை எடுத்து எதிரியின் மண்டையில் அடித்ததும் போத்தல் உடைந்தது. இவற்றை நான் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்."

மல்லாகம் கொலை வழக்கில் சாட்சியமளித்த 10 வயதுச்சிறுவன் சி. விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு கூறினுர். அவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 66-ம் ஆண்டு மார்ச் 6-ம் திகதி மல்லாகத்தில் பொன்னுப்பிள்ளையை வெட்டிக் கொலை செய்ததாக நல்லதம்பி கதிர்காமத்தம்பிமீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் எஸ். செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் எம். மோதிலால் நேரு நியமிக்கப்பட்டிருந்தார்.

விநாயகமூர்த்திசாட்சியத்தில் கூறியதாவது:

எதிரி அம்மாவை வெட்டவர, பேத்தி பொன்னுப்பிள்ளை வெட்டவேண்டாமென்று குறுக்கே கைகளை விரித்தபடி நின்று தடுத்தார். எதிரி பேத்தியின் கையில் வெட்டினுர். பேரன் அழகரத்தினம் எதிரியிடமிருந்து கத்தியைப் பறித்தார். அம்மா அருகில் இருந்த போத்தலால் எதிரியின் மண்டையில் அடிக்க போத்தல் உடைந்தது. எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார். பேத்தியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனுர்கள்.

விசாரணை இன்றுகாலை தொடர்ந்து நடைபெறும்.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
கல்யாணகுமார்
நடித்த
தாயில்லாப்பிள்ளை

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Frank Sinatra
in
VON RYAN'S EXPRESS

மனேகரா
யாழ்ப்பாணம்
6-30, — 9-45 p. m.
எம். கே. தியாகராஜ பாகவதர், மாதுரிதேவி, லலிதா, என். எஸ். கிருஷ்ணன், ரி. ஏ. மதுரம் தங்கவேலு, பாலையா முதலியோர் நடித்த
புது வாழ்வு

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

5-வது வெற்றி வாரம்
கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]
மொடேர்ன் [பதுளை]
தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனேகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.

ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ராமண்ணு


# தமிழ்நாட்டு நகரசபை தேர்தல்

## அடுத்த ஆண்டில்

சென்னை, ஜூன் 1

தமிழ் நாட்டில் நகரசபைத்தேர்தல்களை அடுத்த ஆண்டிலேயே நடத்துவதற்குத் தமிழக அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாகஸ்தலஸ்தாபன மந்திரி திரு. முத்துசாமி நாகர்கோவிலில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

மக்கள் தொகை அதிகரித்துள்ள இடங்களில் ஸ்தானங்களைக் கூட்டுவது பற்றி ஆலோசிக்கப்படுமெனவும் அவர் கூறினுர்.

நாமக்கல் பஸ் விபத்துப் பற்றி அவர் கவலை தெரிவித்தார். விபத்தினுல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பண உதவி செய்வது பற்றித் தாம் பரிசீலனை செய்துவருவதாக அவர் தெரிவித்தார்.

# கேரளத்துக்கு அரிசி

## அண்ணு விளக்கம

சென்னை, ஜூன் 1

கேரளத்துக்கு அரிசி கொடுத்து உதவுவது தற்போது சாத்தியமில்லையென்று தமிழக முதன் மந்திரி திரு. அண்ணுதுரை அறிவித்துள்ளார்.

தமிழக் அரசிடம் 4 லட்சம் டன் அரிசி கையிருப்பில் உள்ளதாகக் கூறப்படுவது தவறு என்றும் இது கொள்முதல் செய்யப்பட்ட அரிசியாகும் என்றும் இதில் ஏற்கனவே 2 லட்சம் டன் அக்சி முடிந்துவிட்டதென்றும் அவர் கூறினுர்.

ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும்அரிசிஅனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்த திரு. அண்ணுதுரை எதிர்வரும் குறுவை சாகுபடியின் பின்னர் வேண்டுமானுல் கேரளத்துக்கு அரிசி அனுப்பக்கூடிய நிலைமை ஏற்படலாமென்றும் தெரிவித்தார்.

கேரள கம்யூனிஸ்ட் தலைவரான திரு. ஏ. கே. கோபாலன், கேரளத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரிசித் தட்டுப்பாட்டை தமிழ்நாட்டிலிருந்து அரிசி அனுப்புவதன் மூலம் அவசர நிலைமையைச் சமாளிக்கலாம் என்றும் அந்த அரிசியைப் பின்னர் மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டுக்குக் கொடுத்துவிடலாமென்றும் அண்மையில் லோகசபையில் ஒரு கருத்து வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# சுவீப் முடிவுகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | X | 0228 | 25 | S | 0291 |
| 08 | C | 0382 | 04 | A | 0892 |
| 06 | X | 0223 | 03 | T | 0756 |
| 15 | O | 0473 | 28 | Y | 0084 |
| 02 | J | 0084 | 06 | J | 0925 |
| 26 | N | 0567 | 38 | J | 0462 |
| 21 | R | 0016 | 22 | F | 0209 |
| 03 | K | 0797 | 20 | Q | 0700 |
| 07 | J | 0466 | 30 | K | 0514 |
| 34 | U | 0692 | 29 | R | 0606 |
| 26 | F | 0989 | 36 | R | 0225 |
| 36 | Q | 0930 | 17 | H | 0833 |
| 38 | T | 0722 | 29 | E | 0286 |
| 26 | J | 0647 | 10 | C | 0857 |
| 34 | A | 0694 | 04 | Z | 0378 |
| 07 | Q | 0758 | 16 | G | 0629 |
| 20 | Q | 0084 | 39 | E | 0571 |
| 13 | Q | 0313 | 40 | N | 0172 |
| 33 | U | 0036 | 38 | Q | 0431 |
| 16 | Z | 0033 | 08 | W | 0751 |
| 03 | R | 0251 | 26 | G | 0523 |

[இவை உறுதிப்படுத்தப்பட வேண்டியவை]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை 6 மணி முதல் இரவு 7 மணிவரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் ஆசிரியர் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவம் நிகழும்.

# தாளையடி இராணுவ தாக்குதல் வழக்கு

## கோப்ரல் சாட்சியம்

சாவகச்சேரி, வியா.

"1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் திகதி இயக்கச்சி இராணுவ முகாமில் கடமையாற்றினேன். அன்று ஓர் அணிவகுப்பு நடைபெற்றது. தாக்கிய வீரர்களை அடையாளம் காண்பதற்காக நடைபெற்ற அவ் அணிவகுப்பில் சாட்சிகள், ஒவ்வொருவராக அடையாளம் காண்பிக்க அனுப்பப்பட்டனர்."

தாளையடி இராணுவத் தாக்குதல் வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு வி. எம். குமாரசாமி முன்னிலையில் இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த இராணுவக் கோப்ரல் திரு. மாணிக்கராஜா மேற்கண்டவாறு கூறினுர்.

இவ் வழக்கு 1964-ம் ஆண்டு ஜூலை 5-ம் திகதி இயக்கச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்களான என். டீ. டீ. பெர்னுன்டோ, கே. பி. சமரசிங்கி, ரி. எவ். சீடின், டபிள்யூ. கே. எம். றூபசிங்கி ஆகிய நால்வரும் இராசநாயகம், ஸ்ரனிஸ்லொஸ், முத்தையா, யோசப் ஆகியோரைத் தாக்கியதாக எல்லாமாக நான்கு குற்றச்சாட்டின் பேரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்காளி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். கே. திரவியநாயகம் ஆஜரானுர். எதிரிகளான இராணுவ வீரர்கள் சார்பில் புறக்டர் சி. பாலகிருஸ்ணன் ஆஜரானுர்.

பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. ஜீ. எம். கருணசேனு சாட்சியமளிக்கையில் "சம்பவ காலத்தில் நான் பளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினேன். அன்று பளைப் பொலிஸ் நிலையத்திலிருந்து இயக்கச்சி இராணுவ முகாமிற்கு அடையாளம் காண்பிப்பதற்காகச் சாட்சிகளான வி. ராசநாயகம், எம். யோசப், எஸ். ரனிஸ்லொஸ், என். ஜி. பொஸ்கோ, எஸ். மரியாம்பிள்ளை, ஒஸ்ரின் பெர்னுன்டோ, யே. ராற்யியன், என். பெனடிக், ருமடிக், திரு. கிருஸ்ணன் [பொலிஸ் சார்ஜன்ட்] ஆகியோரை வானில் கொண்டு சென்றேன்.

மொழி பெயர்ப்பாளர் திரு. யே. டபிள்யூ. நந்தசேனுவும் சாட்சியமளித்தார். மேல் விசாரணை ஆகஸ்ட் 31-ம் திகதியும் செப்டம்பர் 1-ம் திகதியும் நடைபெறும்.

# கும்பாபிஷேகம

திருநெல்வேலி, வெள்ளி

திருநெல்வேலியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகாயரோகண மூத்தநயினுர் என்ற இயற்பெயர்கொண்ட ஸ்ரீதலங்காவற்பிள்ளையாருக்கும் புதிதாக அமைக்கப்பெற்றுள்ள சனீஸ்வரமூர்த்திக்கும் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும் இம்மாதம் 12ம்திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெறும். அன்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

# சிரமதானம்

தாளையடி, வியாழன்

செம்பியன்பற்றுக் கிராம வைத்தியசாலையில் பழுதடைந்த நிலையிலிருந்த வேலிகள் கட்டைபோட்டுக் கம்பி அடித்தல், வைத்தியசாலையைச்சுத்தம்செய்தல், வைத்தியசாலைக் கிணறு மறைவாக அடைத்தல், கழிமண் இழுத்து றோட்டுச் செப்பனிடுதல் இப்படியான வேலைகள் யாவும் சென்ற 28-ந் திகதி சிரமதான முறையில் இப்பகுதி மக்களும் பல உத்தியோகஸ்தர்களும்பங்குகொண்டு செய்து முடித்தனர்.

# 6 மாதச்சிறை

வல்வெட்டித்துறை, வியாழன்

ஊரிக்காட்டைச் சேர்ந்த சேமிப்பிள்ளையின் வீட்டில் 1930 ரூபாய் பெறுமதியான நகை. பணம் முதலியவற்றைக் களவாடியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கணேசு என்பவரை பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா குற்றவாளியாகக்கண்டுஆறுமாதச் சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

# நாஸரின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரி கப்பலொன்று சுயஸ் கால்வாய் வழியாக இந்து சமுத்திரத்தை நோக்கி போய்க் கொண்டிருந்தது.

**பாக்தாத் மகாநாடு**

அரபு எண்ணை நாடுகள் மேற்கு ஆசிய நெருக்கடி பற்றி ஆலோசிப்பதற்காக வரும் ஞாயிற்றுக் கிழமை பாக்தாத்தில் ஒரு முக்கிய மகாநாடொன்றை நடத்தவிருக்கின்றன.

மேற்கு ஆசிய நிலைமை பற்றி ஆராய்ந்து வரும் ஐ. நா. பந்தோபஸ்து சபையின் கூட்டம் இன்று எவ்வித முடிவும் செய்யாமல் நாளை மாலைவரை ஒத்தி வைக்கப்பட்டது.

# மாணவர் சுற்றுலா

இணுவில், வியாழன்

இணுவில் சைவமகா வித்தியாசாலை மாணவர்கள் அதிபர் திரு. வ. நடராசா தலைமையில் இம்மாதம் 3ம்திகதி சுற்றுலா புறப்பட்டு அனுராதபுரம் சிகிரியா மின்னேரி கந்தளாய். பொலநறுவா கண்டி, பேராதனை, மாத்தளை திருக்கோணமலை ஆகியஇடங்களைப் பார்வையிடுவார்கள்.


# மரண அறிவித்தல்

## திருமதி கமலாதேவி விஸ்வேஸ்வரன் அம்மையார்

திருமதி கமலாதேவி விஸ்வேஸ்வரன் அம்மையார் காலமாகிவிட்டார். இவர் மு. விக்னேஸ்வரன் [ஆசிரியர் கனிஷ்ட தொழில்நுட்பபாடசாலை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பலாலி] அவர்களின் அன்புமனைவியும், வசந்ததேவி, ராதாதேவி, இந்திராதேவி, ஜெயதேவி ஆகியோரின் சகோதரியுமாவர். அன்னுரின் இறுதிச் சடங்கு வெள்ளிக்கிழமை [2-6-67] இன்று நிகழ்ந்து பிற்பகல் 3மணியளவில் 341 நாவலர்வீதியிலுள்ள இல்லத்திலிருந்து கோம்பையன் மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்ருேம். 2315


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org